## பெப்ரவரி – 17 – பொதுக்கால 06ம் ஞாயிறு

**“ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர், ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே” லூாக்.6:20**

### முதல் வாசகம் : ஏரேமியா 17 : 5 – 8

ஆண்டவர் கூறுவது இதுவே. மனிதரில் நம்பிக்கை வைப்போரும் வலுவற்ற மனிதரில் தம் வலிமையைக் காண்போரும் சபிக்கப்படுவர். அவர்கள் பாலைநிலத்துப் புதர்ச்செடிக்கு ஒப்பாவர். பருவ காலத்திலும் அவர்கள் பயனடையார் பாலை நிலத்தின் வறண்ட பகுதிகளிலும் யாரும் வாழா உவர் நிலத்திலுமே அவர்கள் குடியிருப்பர். ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர் ஆண்டவரே அவர்களது நம்பிக்கை. அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட மரத்துக்கு ஒப்பாவர் அது நீரோடையை நோக்கி வேர் விடுகின்றது. வெப்பமிகு நேரத்தில் அதற்கு அச்சமில்லை அதன் இலைகள் பசுமையாய் இருக்கும் வறட்சிமிகு ஆண்டிலும் அதற்குக் கவலை இராது. அது எப்போதும் கனி கொடுக்கும்.

**பதில்பாடல்:** ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோர் பேறு பெற்றவர்.

### இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 15 : 12, 16 - 20

சசகோதரர் சகோதரிகளே! இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார் என அறிவிக்கப்பட்டிருக்க, உங்களுள் சிலர் இறந்தோர் உயிர்த்தெழுவதில்லை எனச் சொல்வது ஏன்? ஏனெனில் இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுவதில்லை என்றால் கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகிவிடும். கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே. நீங்கள் இன்னமும் உங்கள் பாவங்களில் வாழ்பவர்களாவீர்கள். அப்படியானால், கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டு இறந்தவர்களும் அழிவுக்குள்ளாவார்கள். கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள எதிர்நோக்கு இவ்வுலக வாழ்வை மட்டும் சார்ந்திருந்தால் எல்லா மக்களையும்விட இரங்குதற்கு உரியவராய் இருப்போம். ஆனால் இப்போதோ, இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப் படுத்துகிறது.

### நற்செய்தி : லூக்கா 6 : 17, 20 – 26

அக்காலத்தில் இயேசு திருத்தூதர்களுடன் இறங்கி வந்து சமவெளியான ஓரிடத்தில் நின்றார். பெருந்திரளான அவருடைய சீடர்களும் யூதேயா முழுவதிலிருந்தும் எருசலேமிலிருந்தும் தீர், சீதோன் கடற்கரைப் பகுதிகளிலிருந்தும் வந்த பெருந்திரளான மக்களும் அங்கே இருந்தார்கள்.இயேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக் கூறியவை ”ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே. இப்பொழுது பட்டினியாய் இருப்போரே, நீங்கள் பேறு பெற்றோர் ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள். இப்பொழுது அழுதுகொண்டிருப்போரே, நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள். மானிடமகன் பொருட்டு மக்கள் உங்களை வெறுத்து, ஒதுக்கிவைத்து, நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளிவிடும்போது நீங்கள் பேறுபெற்றோர். அந்நாளில் துள்ளி மகிழ்ந்து கொண்டாடுங்கள் ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். அவர்களுடைய மூதாதையரும் இறைவாக்கினருக்கு இவ்வாறே செய்துவந்தனர். ஆனால் செல்வர்களே ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள். இப்போது உண்டு கொழுந்திருப்போரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் பட்டினி கிடப்பீர்கள். இப்போது சிரித்து இன்புறுவோரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் துயருற்று அழுவீர்கள். மக்கள் எல்லாரும் உங்களைப் புகழ்ந்து பேசும்போது ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் அவர்களின் மூதாதையரும் போலி இறைவாக்கினருக்கு இவ்வாறே செய்தார்கள்.

**தியானம்:** பேறுபெற்ற மனிதர்களாக வாழ்வது எப்படி என்று இன்றைய வாசகங்கள் வழியாக ஆண்டவர் இயேசு நமக்குக் கற்றுக்கொடுக்கின்றார். இந்த உலகத்தின் கண்ணோட்டத்தில் பணம், புகழ், ஆஸ்தி, சமூக அந்தஸ்து, பதவி, பொருளாதார வசதி இப்படிப்பட்டவர்களே பேறு பெற்றவர்களாக கருதப்படுகிறார்கள். பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்பது சான்றோர்களின் வாக்கு. ஆனால் இயேசுவின் பார்வை வேறுவிதமானது. கடவுளுக்காக நீங்கள் உங்களை இழந்தால், வசதிவாய்ப்புக்களை இழந்தால், உறவுகளை, உணர்வுகளை பலிகொடுத்தால் நீங்கள் பேறுபெற்றவர்கள். “என்னைவிடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோம் என்னுடையோா் எனக்கருதப்படத் தகுதியற்றோர். என்னைவிடத் தம் மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோா் எனக் கருதப்படத் தகுதியற்றோர். தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்” (மத்.10:37-38). நீங்கள் எதைப் பெற்றுக்கொண்டீர்கள், எவற்றை வைத்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து உங்கள் ஆசீர்வாதங்கள் கணக்கிடப்படுவதில்லை அல்லது பேறுபெற்றவர்களாக போற்றப்படுவதில்லை மாறாக உங்களில் வாழ்பவரை அறிந்துகொள்வதிலும், அவரைக் கொண்டாடுவதிலும், அவரை உயர்த்திப்பிடிப்பதிலும், அவரோடு இணைந்து அவருடைய சித்தத்தை இந்த உலகத்தில் நிறைவேற்றுவதிலும்தான் நம்முடைய ஆசீர்வாதம் அல்லது நமது பேறுபெற்ற தன்மை அடங்கியிருக்கின்றது. எனவேதான் தூய பவுலடியார் இவ்வாறு சொல்லுகிறார், நாங்கள் காண்பவற்றையல்ல, நாங்கள் காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை, காணாதவை என்றும் நிலைத்திருப்பவை (2கொரி4:18). இன்றைய முதல் வாசகத்திலே நாம் வாசிக்கின்றோம் வலுவற்ற மனிதரில் தன் நம்பிக்கையை வைப்போர் சபிக்கப்பட்டோர் மாறாக கடவுளில் தம் நம்பிக்கையை வைப்போர் நீரோடையோரம் நடப்பட்ட மரம்போல் என்றும் செழிப்பாக இருப்பர் என்று. இந்த உலகத்தில் வாழ்வதற்காக கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் பொருள்களையும், செல்வங்களையும், மனிதர்களையும் பிடித்துக்கொண்டு கடவுளை மறந்துபோனோமென்றால் நாம் சபிக்கப்பட்ட மனிதர்களாக, கேடுற்ற மனிதர்களாக மாறிப்போவோம். மாறாக கடவுளையும் அவரது அன்பையும் அவரது கிருபையையும் ஒவ்வொருநாளும் நினைத்து அவருக்காக வாழ ஆரம்பிக்கும்போது நாம் பேறுபெற்ற மனிதர்களாக இந்த உலகத்திற்கே ஆசீர்வாதமான பாத்திரங்களாக நாம் மாறுவோம். இயேசுவுக்காக நாம் வாழ்ந்தால், அதற்காக நாம் நொறுக்கப்பட்டால், அவமானப்பட்டால், இழப்புக்களுக்கு ஆளாகினால் நாம் பேறுபெற்றவர்களே. வாழ்க்கை என்பது ஒருமுறை அந்த வாழ்வு இயேசுவுக்காக அவரது மகிமைக்காக என்று வாழும்போது நாமும் பேறுபெற்ற மனிதர்களாக வாழ முடியும்.